**பாணந்துறை பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாணந்துறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பாணந்துறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் அத்தியாயம் 6.3 ஆம் பிரிவின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பெறுமதி ரூபா 266,798,885 | 2023 இன் கணக்காண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் தனித் தனியாக இனங்கண்டு புதிய மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்படும். | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஆன காணி கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மேற்கூறப்பட்ட நியமத்தின் 6.15 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களை பயன்படுத்துவதற்கும் மற்றும் அதில் எதிர்பார்க்கப்பட்ட ஏற்றுக் கொள்ளக்கூடிய காலக்கழிவு முறைமை ஒன்றைத் தெரிவு செய்து பெறுமானத் தேய்வு செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் 2023 ஆம் ஆண்டின் போது பெறுமானத் தேய்வை இனங்கண்டு இறுதிக் கணக்குகளில் சமர்ப்பிக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீகளை இனங்கண்டு இறுதிக் கணக்குகள் மூலம் சமர்ப்பிக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் ஆண்டில் முத்திரைக் கட்டண கடன்பட்டோர் ரூபா 1,000,000 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்யப்படும் எனக் குறிப்பிடுகின்றோம். | - மேற்படி - |
| (இ) மீளாய்வாண்டிற்காக கிடைக்கவேண்டிய நிலையான வைப்பு வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாக இறுதிக் கணக்கில் சிராக்கி சமர்ப்பிக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 6,920,625 ஆன 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | 2023 இன் கணக்காண்டின் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது இனங்காணப்பட்ட மீதி சமர்ப்பிக்கப்படும். | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.4 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதற்குரிய பட்டோலைகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 549,759,346 வேறுபாடு காணப்பட்டது. | 2023 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | நிதிக் கூற்றுக்களின் மீதியும் பட்டோலைகளின் மீதியும் சமமாக இருத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| 160 ஆம் பிரிவு | வரி அறவிடும் இறுதிக் கட்டமாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் ஆதனங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ள்ளது. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104 | கெசல்வத்த உப அலுவலகத்தில் திக்கல ஆற்ரோத்தில் படகு ஒன்று காணாமல் போய் இருந்ததுடன் அது தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் உத்தியோகத்தர்களால் படகினைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 395(அ) | சபையின் 04 நடைமுறைக் கணக்குகளுக்குரிய நிதிப் பிரமாணம் 395 இன் பிரகாரம் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கி இணக்கம் தயாரித்து முடிவடைந்தவுடன் சமர்ப்பிக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | 2020 ஒக்டோபர் 02 ஆம் திகதிய இலக்கம் 05/2020 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | 2023 சனவரி 31 ஆம் திகதி வரையில் சபைக்குச் சொந்தமான 12 வாகனங்கள் செயழிலந்த நிலையில் காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,923,009 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 95,803,562 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | **31,334,126** | **31,593,211** | **17,290,160** | **14,363,051** | **35,273,461** | **32,055,123** | **33,471,645** | **33,589,942** |
| (ii) | வாடகை | **406,000** | **532,200** | **395,200** | **137,000** | **6,975,550** | **2,287,200** | **16,654,636** | **5,284,163** |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | **512,000** | **494,000** | **479,000** | **15,000** | **6,440,000** | **544,000** | **1,586,619** | **64,000** |
| (iv) | ஏனைய வருமானம் | **2,500,000** | **9,960,000** | **9,960,000** | **-** | **112,915,000** | **12,915,000** | **151,223,389** | **107,025,408** |
| | மொத்தம் | **34,752,126** | **42,579,411** | **28,124,360** | **14,515,051** | **161,604,011** | **147,801,323** | **202,936,289** | **145,963,513** |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 சனவரி 01 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 33,589,943 ஆக இருந்ததுடன் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு அது ரூபா 7,038,031 ஆகும். | நிலுவையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆதனவரி 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதும் 02 உப அலுவலகங்களில் 2007 ஆம் ஆண்டு முதலும், வாத்துவை உப அலுவலகத்தில் 2014 ஆம் ஆண்டில் இருந்து ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | ஆதனவரி மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் அறவிட வேண்டிய வியாபார நிலைய வாடகை வருமானம் ரூபா 4,652,163 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 4,301,163 தொகை அதாவது 92 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதில் கெசல்வத்த பொலிஸ் நிலையத்தின் நிலுவைப் பணம் உள்ளடங்கியுள்ளது. இது தொடர்பாக ஆதன முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை கொடுப்பனவு செய்யப்படாதிருந்ததுடன் நிலுவைப் பணம் செலுத்த முடியாதிருந்ததாக சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **பெறுகைகள் திட்டம்** | | |
| | பெறுகைகள் மேற்கொள்ள வேண்டிய ஒவ்வொரு தொகுதி மற்றும் உபகரணங்களுக்காக விரிவான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் பெறுகை நடவடிக்கைகளுக்காக ரூபா 42 மில்லியன் தொகை வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் விரிவான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | பெறுகை திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **கைவிடப்பட்ட இலக்கு** | | |
| | 1998 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற நீர் வழங்கல் | உரிய நிலப் பகுதியைக் கைப்பற்றிக் | செயற்றிட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பிரச்சினையை தீர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட றிப்பெத்த பூஞ்ஞானந்த மாவத்தையில் கஜுகஹவத்த காணி எல்லையான அரசாங்கத்தின் காணியில் பொது வடிகாண் நிர்மாணித்து மழைநீர் வழிந்தோடிச் செல்லும் செயற்திட்டத்தின் கீழ் தனியார் காணி ஊடாக செல்லும் வடிகாண் பகுதி மாத்திரம் ரூபா 253,577 செலவில் நிர்மாணிக்கப்பட்டு செயற்றிட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக வீதியின் வடிகாணில் இருந்து மழைநீர் தனியார் தனியார் காணிக்கு வழிந்தோடிச் சென்று பாதிப்புக்கு உற்படுவதற்கு மேலதிகமாக மழைநீர் வழிந்தோடிச் சென்றமையால் வீதியையும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **கழிவுப் பொருள் முகாமைத்துவம்** | | |
| | சபையினால் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகள் 400 லோட்டிற்காக ரூபா 4,135,538 தொகையில் களுத்துறை பொஹரவத்த மிகிசரு கூட்டுப்பசளை தளத்திற்கும், 418 லோட்டிற்காக ரூபா 11,988,000 தொகை G.F.C மெசனரி நிறுவனத்திற்கும் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வேறு பிரிக்கப்பட்ட கழிவுப் பொருள் 01 லோட் மிகிசரு கழிவுப் பொருள் தளத்தில் அகற்றுவதற்காக ரூபா 10,338 செலவிடப்பட்டிருந்ததுடன் G.F.C மெசனரி நிறுவனத்திற்கு 01 லோட் அகற்றுவதற்கு ரூபா 26,791 தொகை | டிப்பர் வண்டி காணப்படாமையின் காரணமாக இந்த நிலைமை எழுந்திருந்ததுடன் உக்குகின்ற கழிவுப் பொருள்கள் தனியார் பிரிவிற்கு வழங்குவதைத் தடுப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திறனாக கழிவுகளை அகற்றும் முறைமை ஒன்றை ஈடுபடுத்துதல் வேண்டும். |

செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மொத்த வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளின் அளவு மிகிசரு கழிவுப் பொருள் தளத்தில் அகற்றப்பட்டிருக்குமாயின் சபைக்கு ரூபா 8,131,354 இனை சேமிக்க முடியுமாக இருக்கும்.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 4/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யவேண்டுமென உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய இலக்கம் LGD/10A/4/ந.கி/2019 என்ற கடிதத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட போதும் பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டின் போதும் சில சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மோட்டார் வாகனங்கள் தவிர ஏனைய சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஏனைய சொத்தக்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக நேரகாலம் காணப்படாதிருந்தமையினால் 2023 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்து பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனவிதிக் கோவையின் 11 ஆவது அத்தியாயத்தின் 3.8 ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளவேண்டிய போதும் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சேவையில் இருக்கின்ற MN01 சம்பளப் படிநிலை மற்றும் அதற்கு மேற்பட்ட சம்பளப் படிநிலையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இடையே தொடர்ச்சியாக 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் இடமாற்றம் வழங்கப்படாமல் 16 உத்தியோத்தர்கள் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டு முதல் நாட்டில் காணப்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் அடிப்படையில் பிரதம செயலாளர் (மே.மா) வருடாந்த இடமாற்றங்கள் அமுல்படுத்தப்படவில்லை. | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **ஊழியர் கடன்** | | |
| | மரணமடைந்த, சேவையை விட்டுச்சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 12 ஊழியர்களிடமிருந்து 2008 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 911,754 தொகை 2022 திசெம்பர் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் மீதி பட்டோலைகளுடன் சரிசெய்து இறுதிக் கணக்கில் சிராக்கி சமர்ப்பிக் கப்படும். | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |